# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## MC.No. 7 / 2024
## PW-1

2025-ம் ஆண்டு ஜீலை மாதம் 03-ம் நாள் வியாழன் கிழமை மனுதாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 03.07.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல். அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சூர்யா | **தொழில்** | : | அலுவலக பணி |
| **க/பெ.** | : | அரவிந்த் | **வசிப்பிடம்** | : | வடலூர் |
| **வயது** | : | 24 | **வட்டம்** | : | குறிஞ்சிப்பாடி |

**முதல் விசாரணை :**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். 2வது மனுதாரர் எனது மைனர் மகள் ஆவார். என்னுடைய முதல் விசாரணையை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் எனக்காகவும், இரண்டாம் மனுதாரருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை இந்த இடைக்கால மனுவில் எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| **ம.சா.ஆ.1** | 1ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 24.08.2022 அன்று திருமணம் நடந்ததற்கான திருமண அழைப்பிதழ் |
| **ம.சா.ஆ.2** | 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ( **அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது**). |

| | |
|---|---|
| **ம.சா.ஆ.3** | 2 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் (**அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது**). |

**(எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது.)**